Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 15, 2022

திங்கட்கிழமை பெப்ரவரி 15, 2022 | ஒளி: 07 கதிர்: 232 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## ஊடகவியலாளர் சமுதித வீட்டின் மீது தாக்குதல்

### கட்சிகள் கண்டனம் தெரிவிப்பு
### அரசாங்கம் தலையிடாது என்கிறார் பீரிஸ்

ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரமவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய சம்பம் தொடர்பில், அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உட்பட சில கட்சிகள் இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன. இதேவேளை, ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரமவின் வீட்டின் மீதான தாக்குதல் போன்ற சம்பவங்களில்



அரசாங்கம் ஒருபோதும் அரசியல் ரீதியாக

தொடர்ச்சி P2



ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் நிலைப்பாட்டை

# சர்வதேச சமூகம் ஏற்கும்

### வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இலங்கை கலந்துகொள்வதாகத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்தின் பெரும்பான்மையான சமூகம் ஏற்றுக்கொள்ளும் என வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடைச் சட்ட விவகாரம்

## சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி மனு

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் நேற்று (14) மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்துவதற்காக, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கடந்த 11ஆம் திகதி திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். திருத்தச் சட்டமூலம்



இலங்கையின் அரசியலமைப்பை மீறுவதாக உயர்நீதிமன்ற தீர்ப்பை வழங்குமாறு கோரியே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

பொரளை கைக்குண்டு விவகாரம்

## வைத்தியருக்கு விளக்கமறியல்

பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பிலியந்தலை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற வைத்தியரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய, நேற்று (14) உத்தரவிட்டார்.



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது

தொடர்ச்சி P2

## ஆராச்சிக்கட்டுவ விபத்தில் இருவர் மரணம்




புத்தளம்- கொழும்பு வீதியில் ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் நேற்று (14) மாலை இடம்பெற்ற விபத்தில், இருவர் மரணமடைந்துள்ளனர்.

நுரைச்சோலையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வானொன்று, வீதியின் வலதுபுறத்தில் பயணித்த மோட்டார் சைக்கிளை முட்டிமோதித் தள்ளிவுள்ளது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் மரணமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## உக்ரைனை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

### அவசர நிலை வந்தால் இலங்கையர் வெளியேற்றப்படுவர்

உக்ரைனில் வசிக்கும் இலங்கையர்களின் நிலைமையை வெளிவிவகார அமைச்சு உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவித்த அமைச்சின் பேச்சாளர், ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால் இலங்கை பிரஜைகளை வெளியேற்ற தேவையான



நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சுகாதார தொழிற்சங்கங்கள்

## ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து 17 சுகாதார தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏராளமான சுகாதார ஊழியர்கள், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று (14) பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று காலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகாமையில் இருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட பேரணி, ஜனாதிபதி செயலக கட்டடத்தை நோக்கிச் சென்றது. இதன் காரணமாக அப்பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள வீதிகளில்



கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

25 சதவீத வரி விவகாரம்

## சட்ட நடவடிக்கை குறித்து ஆராய்கிறது எதிர்க்கட்சி

மேலதிக கட்டண வரி சட்டமூலத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதிக்கு 25 சதவீத வரியை அமல்படுத்தும் தீர்மானத்துக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று (14) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சட்ட நடவடிக்கைகளுக்கு



மேலதிகமாக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



பாராளுமன்றத்தில்

## 3 பிரதானிகள் உட்பட 28 பேருக்கு கொரோனா

பாராளுமன்றத்தின் சில பிரிவுகளின் மூன்று பிரதானிகள் உட்பட மேலும் 28 ஊழியர்கள், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று (14) கண்டறியப்பட்டது.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று காலை, 112 பணியாள் தொகுதியினருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது, அதில் 28 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

சிவில் செயற்பாட்டாளர்

## ஷெஹான் மாலக்க சீ.ஐ.டியால் கைது

சிவில் செயற்பாட்டாளர் ஷெஹான் மாலக கமகே, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (சீ.ஐ.டி) நேற்று (14) கைது செய்யப்பட்டார். 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில், ஷெஹான் மாலக கமகே கடந்த ஆண்டு வெளிப்படையாகப் பேசியிருந்தார். இது ஓர் அரசியல் சதி என்று கூறிய அவர், இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

தொடர்ச்சி P2




## பிம்ஸ்டெக் மாநாட்டுக்கு வருமாறு

## பிரதமர் மோடிக்கு இலங்கை அழைப்பு

மார்ச் மாதம் 31ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவுக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (பிம்ஸ்டெக்) மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று (14) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை



வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இந்திய நிதியமைச்சருடன் உயர்ஸ்தானிகர் சந்திப்பு

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்தியாவின் நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சர் ஸ்ரீமதி நிர்மலா சீதாராமனை புதுடெல்லியில் சந்தித்தார். இந்த இக்கட்டான நேரத்தில், இலங்கைக்கு ஆதரவளிப்பதில் இந்திய நிதியமைச்சர் மேற்கொண்ட தனிப்பட்ட அக்கறைக்கு உயர்ஸ்தானிகர் மொரகொட நன்றி தெரிவித்தார். கடந்த டிசெம்பரில் இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் போது ஒப்புக் கொள்ளப்பட்ட ஒத்துழைப்புக்கான நான்கு தூண்களின் கீழ் இந்தியா, இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்கு அவர் நன்றிகளைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## ஊடகவியலாளர் சமுதித வீட்டின் மீது தாக்குதல்

தலையிடாது என்று தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும் எனவும் நேற்று (14) தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரமவின் வீட்டின் மீது முகமூடி அணிந்த இனந்தெரியாத குழுவினர், நேற்று (14) அதிகாலை தாக்குதல் நடத்தியுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

சிறிய வெள்ளை வானில் வந்துள்ள நான்கு பேர் கொண்ட குழுவொன்று, சமுதித வசித்த அடுக்குமாடி குடியிருப்பின் பாதுகாவலரை துப்பாக்கியை காட்டி மிரட்டி, பாதுகாப்பு அறையில் அடைத்து வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அவர்களில் ஒருவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு அருகில் நின்றிருந்த நிலையில் ஏனைய மூவரும் சமரவிக்ரமவின் வீட்டுக்கு முன்பாக நின்று தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த அடுக்குமாடி குடியிருப்பில் 100க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ள நிலையில், ஏற்கெனவே திட்டமிட்டபடி சமுதிதவின் வீட்டின் மீது நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

கடந்த திங்கட்கிழமை (07) காலை 7 மணிமுதல, சம்பள முரண்பாடுகளை நீக்குதல், சிறப்புக் கடமை கொடுப்பனவை ரூ.10,000 ஆக அதிகரித்தல் மற்றும் சுகாதாரத் தொழில்சார் சேவைகளை மூடிய சேவைகளாக மாற்றுதல் உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து 18 சுகாதார தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த வேலைநிறுத்தப் போராட்டம், நேற்றுடன் 8ஆவது நாளாகவும் தொடர்கிறது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவையடுத்து அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கம் மாத்திரம் பணிப்புறக்கணிப்பில் இருந்து விலக தீர்மானித்திருந்தது.

எவ்வாறாயினும், எஞ்சிய 17 தொழிற்சங்கங்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்கிறது. சுகாதார தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம் காரணமாக அரச வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் தொடர்ந்தும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## 3 பிரதானிகள் உட்பட 28 பேருக்கு கொரோனா

கொரோனா தொற்றுக்குள்ளான 28 பேரும் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கடந்த சில வாரங்களில் மட்டும் கொரோனா தொற்றுக்குள்ளான பணியாட் தொகுதியினரின் எண்ணிக்கை 98 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதுவரை 49 எம்.பி.க்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், பாராளுமன்றத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், அதன் செயற்பாடுகள் வழமை போன்று இடம்பெறுவதாக பாராளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற வளாகத்துக்கென தனி சுகாதாரத் திட்டமும் கடந்த வாரம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், பாராளுமன்ற வளாகத்துக்கு வெளியாட்களை வரவழைப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மோடிக்கு இலங்கை அழைப்பு

அங்கு மேலும் தெரிவித்த அவர், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும் மார்ச் 31ஆம் திகதி இடம்பெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த நிதியமைச்சர் பெசில் ராஜபக்‌ஷ, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோருடன் கலந்துரையாடியமையை சுட்டிக்காட்டினார்.

மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலின் விளைவாக இந்தியா 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சர் பெசில் ராஜபக்‌ஷ, உரிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கும் அதற்கான நிதியை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கும், இரண்டு வாரங்களுக்குள் மீண்டும் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இந்திய அமைச்சரின் அழைப்பின் பேரில் தானும் மீண்டுமோர் உத்தியோகபூர்வ விஜயமொன்றை இந்தியாவுக்கு மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அழைப்பை ஏற்றுக்கொண்டதாகவும், மார்ச் 18 முதல் 20 வரை இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## ஆராச்சிக்கட்டுவ விபத்தில் இருவர் மரணம்

வானின் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால், வீதியின் மறுபுறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மீது மோதியுள்ளது. அந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள், சிலாபத்தில் இருந்து ஆனவிழுந்தாவவை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தனர்.

வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் சேவையாற்றிய, தொழிலாளர்கள் இருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர் எனத் தெரிவித்த ஆராச்சிக்கட்டுவ பொலிஸார், வானின் சாரதியை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# சர்வதேச சமூகம் ஏற்கும்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று (14) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்செலட்டினால் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த அறிக்கை மார்ச் 3 ஆம் திகதி விவாதிக்கப்படும் என்றும் இந்த அறிக்கையின் பிரதியை வெளிவிவகார அமைச்சுக்கு வழங்குவதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் உறுதியளித்துள்ளதாக குறிப்பிட்டார்.

ஐந்து நாட்களுக்குள் இலங்கை பதில் அளிக்க வேண்டும் என்றும், உரிய பதில்கள் கவனமாக தொகுக்கப்பட்டு பெப்ரவரி 19 ஆம் திகதி ஜெனிவாவுக்கு அனுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இலங்கை கலந்துகொள்வதாகவும் இலங்கையின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்தின் பெரும்பான்மையான சமூகம் ஏற்றுக்கொள்ளும் என வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தினார்.

## சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி மனு

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இந்த சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமானால், அது பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையால் அல்லது வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஷெஹான் மாலக்க சீ.ஐ.டியால் கைது

2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், தாக்குதல்கள் தொடர்பில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டார்.

ஷெஹான் மாலக கமகே நேற்றைதினம் கைது செய்யப்பட்ட போதிலும், அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கான சரியான காரணங்களை பொலிஸார் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடந்த வருடம் இலங்கை கத்தோலிக்க திருச்சபையால் முன்மொழியப்பட்ட கறுப்புக் கொடி பிரச்சாரத்தை ஏற்பாடு செய்வதிலும் அவர் முக்கிய பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

ஏழு மாணவர்கள் உட்பட நாற்பது இலங்கையர்கள் தற்போது உக்ரைனில் வசிப்பதாகவும் அங்காராவிலுள்ள இலங்கைத் தூதரகம். உக்ரைனின் நிலைமைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

ரஷ்யா போர் தொடுக்கலாம் என்ற எச்சரிக்கைகளுக்கு மத்தியில், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட ஏராளமான நாடுகள் உக்ரேனை விட்டு வெளியேறுமாறு தங்கள் குடிமக்களை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய நிதியமைச்சருடன் உயர்ஸ்தானிகர் சந்திப்பு

நான்கு தூண்கள் கொண்ட இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்புக் கருத்தின் ஒரு பகுதியான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்தற்கான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வரியை முன்கூட்டியே இறுதி செய்வது குறித்தும் உயர்ஸ்தானிகர் அமைச்சர் சீதாராமனை வலியுறுத்தினார்.

2022 ஜனவரி 18ஆம் திகதி நிதியமைச்சர் பெசில் ராஜபக்‌ஷவுக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி. எஸ். ஜெய்சங்கருக்கும் இடையே நடந்த மெய்நிகர் சந்திப்பில் இது தொடர்பான முன்னேற்றம் கடைசியாக மீளாய்வு செய்யப்பட்டது.

## வைத்தியருக்கு விளக்கமறியல்

செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த வைத்தியர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கைக்குண்டு விவகாரம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய, பனாமுர பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளின் பின்னர் ஜனவரி 18ஆம் திகதி இரவு வைத்தியர் செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வைத்தியரின் பெரிய வீட்டில் இருந்து துப்பாக்கிகள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்தனர்.

நான்கு கைத்துப்பாக்கிகள், ஒரு ரிவோல்வர், இரண்டு வாள்கள், ஒரு ரம்போ கத்தி மற்றும் அடையாளம் தெரியாத துப்பாக்கியொன்றும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்ட நடவடிக்கை குறித்து ஆராய்கிறது எதிர்க்கட்சி

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது, 2 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இலாபம் ஈட்டும் நிறுவனங்களுக்கு 25 சதவீத மேலதிக வரி விதிக்கப்படும் என நிதி அமைச்சர் தெரிவித்ததாக அத்தநாயக்க எம்.பி சுட்டிக்காட்டினார்.

வணிகர்கள் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் இழக்க நேரிடும் என்பதாலும் முதலீடுகளையும் பாதிக்கும் என்பதாலும் இதை அவர்கள் ஏற்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அரச நிறுவனங்களுக்கு 25 சதவீத மேலதிக கட்டணத்தை விதிப்பது அறிவிக்கும் போது, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஓய்வூதிய நிதி ஆகியவற்றை நிதியமைச்சர் குறிப்பிடப்படவில்லை என்றும் அத்தநாயக்க எம்.பி சுட்டிக்காட்டினார்.

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை இலக்காகக் கொண்டு பாராளுமன்றத்தில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது என்று தெரிவித்த அவர், உத்தேச மேலதிக கட்டணம் மூலம் ரூ.70 பில்லியனைப் பெறுவதற்கு அரசாங்கம் முயல்கிறது என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்தின் தீர்மானத்துடன் தாம் உடன்படவில்லை என தெரிவித்த அத்தநாயக்க எம்.பி, வர்த்தமானி அறிவித்தலை மாற்றியமைக்குமாறு கோருவதாகவும் வர்த்தமானி மாற்றப்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

## “பொதுமக்களுக்குத் தரமான போக்குவரத்து சேவையை வழங்குங்கள்”

**போக்குவரத்துத் துறையின் புதிய வருவாய் முறைமைகள் குறித்து அவதானம்.**

**முந்தைய அரசாங்கத்தால் முறைசாரா முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்குப் பயிற்சி.**

**மின்சார பஸ்களை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வு.**

முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின் போது கொள்வனவுக்கான கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகளின் தொழில்நுட்பக் கோளாறுகளைச் சரிசெய்து, அவற்றை உடனடியாகப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்து, போக்குவரத்து ஒழுங்குபடுத்தல், பஸ் சேவைகள், ரயில்வே மற்றும் மோட்டார் தொழிற்துறை அமைச்சுக்களின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டம், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (14) மாலை இடம்பெற்ற போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.



கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின் போது, 160 ரயில் பெட்டிகளுக்கான கொள்வனவுக் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 120 ரயில் பெட்டிகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும், அவற்றில் 40 பெட்டிகள் மாத்திரமே போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்படாத ஏனைய பெட்டிகளை உடனடியாகச் சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்குமாறு, இக்கூட்டத்தின் போது ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்துச் சேவையில் இணைக்கக்கூடிய வகையில் இருப்பினும் சேவைக்குப் பயன்படுத்தப்படாதுள்ள பஸ்களைப் பழுதுபார்த்து, குறுந்தூரச் சேவைகளுக்குப் பயன்படுத்துமாறும் அதன் மூலம், கிராமிய மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு கிட்டுமென்றும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

> **160 ரயில் பெட்டிகளுக்கான கொள்வனவுக் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 120 ரயில் பெட்டிகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள. அவற்றில் 40 பெட்டிகள் மாத்திரமே போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சேவையில்**

அனைத்துத் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களுடன் நட்புணர்வுடன் பணியாற்றுவதன் மூலம், போக்குவரத்துக் கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்றும் ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, மக்களை ஒடுக்கும் தொழிற்சங்கப் போராட்டங்களை நிறுத்துவதற்கு, அனைத்துத் தரப்பினரும் புரிந்துணர்வுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

# பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும்



ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீடு தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்களில் அரசாங்கம் ஒருபோதும் அரசியல் ரீதியாக தலையிடாது எனவும், சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம், நீதித்துறை ஊடாக இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் உரிய நடைமுறை செயற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

நாட்டில் ஊடக அடக்குமுறை இல்லை என்பது, பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் ஊடாக அரசாங்கத்தின் மீது சுமத்தப்படும் விமர்சனங்களின் ஊடாகத் தெளிவாகத் தெரிகின்றது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நடவடிக்கை எடுக்க தயங்கோம்

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்கிரமவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஊடக சுதந்திரத்துக்கு இவ்வாறு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி, ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடும் நபர்களை பாதுகாப்பதே இத்தகைய தாக்குதல்களின் நோக்கம் என்பது தெளிவாகின்றது.

ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிராக கடந்த காலங்களில் குற்றங்கள் இழைத்தவர்கள் இன்றும் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல், சுதந்திரமாக உலா வருவதும் இப்படியான தாக்குதல்களுக்கு ஆசீர்வாதமாக அமைவதாக தமது சங்கம் கருதுவதாக தெரிவித்துள்ளது.

எனவே இந்தத் தாக்குதல் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க இலங்கையிலும் சர்வதேச அளவிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமது சங்கம் தயங்காது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியாயமான விசாரணை நடத்தவும்



சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரம மீதான குண்டர் தாக்குதல், நான்காவது அரசாங்கமாகக் கருதப்படும் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டர் தாக்குதலாகும் என்பதோடு, இது தொடர்பாகத் தாம் மிகுந்தவெறுப்பும் அதிருப்தியும் அடைவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவமானகரமான குண்டர் தாக்குதல் குறித்து வெளிப்படையாக, பாரபட்சமற்ற, நியாயமான விசாரணையை நடத்தி, இதனுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எதிராகச் சட்டம் கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

ஊடகங்களை நடத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதிக்க எவருக்கும் உரிமை இல்லை எனத் தெரிவித்த அவர், ஊடகங்களுக்குரிய சுதந்திரம் அவ்வாறே பேணப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கோழைத்தனமான தாக்குதலின் பின்னணியில் ஊழல்வாதிகள்

இலங்கையின் அரசியல் தொடர்பில், பரபரப்பான ஊடக நிகழ்ச்சி ஒன்றை நடத்தி வரும் ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரமவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான தாக்குதலை மக்கள் விடுதலை முன்னணி வன்மையாக கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

அவரது சமூக ஊடக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் காரணமாக அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட ஊழல்பேர்வழிகளான அரசியல்வாதிகளும் அதனோடு சம்பந்தப்பட்ட கறுப்புச்சந்தை வியாபாரிகளும் பற்றிய தகவல்கள் பாரியளவில் சமூகத்தில் அம்பலமாகி வந்துகொண்டிருந்த வேளையில், இந்தத் தாக்குதல் அவரது சமூக பாவனையின் பெறுபேறாகவும் அந்தச் செயற்பாங்குடன் தொடர்புடைய மிரட்டலாகவும் மேற்கொள்ளப்பட்டுதென்பது தெளிவானதாகும்.

குறிப்பாக பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்ற மறைவில் அரசாங்கத்தால் ஆயுதக்குழுக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இவ்வாறான சம்பவங்கள் மிகவும் பாரதூரமானவையாகும்.

இத்தகைய பல சம்பவங்களுடன் தொடர்புடைய நேரடியான குற்றவாளிகளும் மறைவில் இருந்துகொண்டு அவர்களை இயக்குபவர்களும் ஒருபோதுமே சட்டத்தின்முன் நிறுத்தப்படவில்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.




திருக்கேதீஸ்வர நுழைவாயிலில்

# கிறிஸ்தவ சொரூபம் திறந்துவைப்பு

சைவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க தலமான திருக்கேதீஸ்வர நுழைவாயிலில், மிகப்பெரும் கிறிஸ்தவ சொரூபம் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளதன் மூலம், மன்னார் கிறிஸ்தவ சமூகம் மீண்டும் சைவ மக்களை புண்படுத்தியுள்ளதாக அகில இலங்கை சைவ மகா சபை தெரிவித்துள்ளது.

கிறிஸ்தவர்களின் குறித்த செயலை வன்மையாகக் கண்டித்துள்ள சைவ மகா சபை, மேற்படி சொரூபத்தை அந்த இடத்தில் இருந்து அகற்ற, மன்னார் ஆயர் இல்லம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சைவ மகா சபை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வரலாற்றுப் பெருமைமிகு பாடல் பெற்ற ஈச்சரமான திருக்கேதீச்சரத்தில் அதன் தனித்துவத்தை சிதைக்கும் வகையில், சைவர்களின் மனதை மீள மீள புண்படுத்தும் வகையில், திருக்கேதீச்சர வளைவு உடைக்கப்பட்ட வீதியின் முகப்பில் மிகப் பெரிய கிறிஸ்தவ சொரூபம் அமைக்கப்பட்டு, 12.02.2022 திறக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இவ்விடயம் இடம்பெற்றுள்ளது. மன்னார் உயர் அரச அதிகாரிகளுக்கு முன்கூட்டியே அறிவித்தும் சொரூபம் அமைக்கபப்பட்டுள்ளதாக கூறப்படுவது மிகுந்த அவதானத்துக்குரிய விடயமாகும்.

இது தொடர்பாக திருக்கேதீச்சர கோவில் நிர்வாகம், பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளது.

மத நல்லிணக்கத்தை பாதிக்கும் இவ்வாறான செயல்களுக்கு உறுதுணை வழங்காது, சொரூபத்தை, திருக்கேதீச்சர நுழைவாயிலான அவ்விடத்திலிருந்து அகற்ற தேவாலாய நிர்வாகத்தை மன்னார் ஆயர் இல்லம் பணிக்க வேண்டும்.

அரச உயர் அதிகாரிகளும் இனியும் அசமந்தப் போக்குடன் நடந்து கொள்ளாது, மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும், தொல்லியல் மரபுரிமைகளில் மாற்றம் செய்யும், தனித்துவத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த வேண்டும்.

அத்துடன், சர்ச்சைக்குரிய சொரூபத்தை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்குமாறு, சைவர்களின் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபை கேட்டுக்கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண மோசடி செய்து தலைமறைவாகியிருந்த

# ஆசிரியர் சிக்கினார்

மோசடியான முறையில் பெற்றுக்கொண்ட 30 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பணத்துடன் தப்பிச் சென்று, தலைமறைவாகியிருந்த ஆசிரியர் ஒருவர் ஹொரணை விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முதலீடு செய்யப்படும் பணத்துக்கு உயர் வட்டியை வழங்குவதாகத் தெரிவித்து 30 மில்லியனுக்கு அதிகமான பணத்தை சந்தேகநபர் சம்பாதித்துள்ளார் என ஹொரணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், அரசாங்கப் பாடசாலையில் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர் என தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபர் இதுவரை 35 பேரிடம் இவ்வாறு மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபரால் மோசடிக்குள்ளானவர்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களுள் பெரும்பாலானவர்கள் ஆசிரியர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முக்கோண காதலால் 60 வயதான பெண் மரணம்

40 வயது நபரொருவரைக் காதலித்த இரண்டு பெண்களும் ஒரே நாளில் தமதுயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளனர். இதில், ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றையவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த பெண் 60 வயதானவர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மற்றைய பெண் 32 வயதுடையவர். உயிரிழந்த 60 வயது பெண்ணின் கணவர், 15 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து குறித்த பெண், 25 வயதுடைய இளைஞர் ஒருவருடன் உறவினைப் பேணி வந்துள்ளதுடன், தனது சொகுசு வீடு உள்ளிட்ட அனைத்து சொத்துகளையும் அந்த இளைஞனின் பெயருக்கே எழுதியும் வைத்துள்ளார்.

இதனையடுத்து கடந்த 15 வருடங்களாக இருவரும் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்துள்ளனர். உயிரிழந்ததாகக் கூறப்படும் தனது கணவன், பிலியந்தலை பிரதேசத்திலேயே வேறொரு பெண்ணுடன் இரகசியமாக வாழ்ந்து வருவது தெரியவந்துள்ளதுடன், அது உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து தனது வீட்டுக்கு வந்த 60 வயது பெண் மனமுடைந்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். தன்னுடன் இதுவரை வாழ்ந்து வந்த நபர், 60 வயது பெண்ணுடனும் வாழ்ந்து வந்துள்ளதை அறிந்துக்கொண்ட 32 வயதான பெண்ணும் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளார். எனினும், அப்பெண் காப்பாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அமைதிகாக்கும் குழுவை ஐ.நா பிரதிநிதி பாராட்டினார்

மாலியில் ஐ.நா அமைதிகாக்கும் இராணுவ குழுவில், இலங்கை இராணுவம் சிறப்பாக பங்காற்றி வருவது தொடர்பில், ஐ.நா செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி, இலங்கை இராணுவத்தின் அமைதி காக்கும் குழுவைப் பாராட்டியுள்ளார்.

ஐ.நா பொதுச் செயலாளர் நாயகத்தின் சிறப்பு பிரதி பிரதிநிதியும் மாலியில் ஐ.நா அமைதிகாக்கும் பணிகளின் தலைவருமான எல் - காசிம் வானே நேற்று முன்தினம் (12) மாலியிலுள்ள ஐ.நா அமைதிகாக்கும் பணிகளை நிறைவு செய்துகொண்டு, நாடு திரும்பவிருக்கும் இலங்கை குழுவின் மரியாதை அணிவகுப்பில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை இராணுவ குழுக்கள் மாலியில் ஆற்றிவரும் நடவடிக்கைகள் விலைமதிப்பற்றவை என பாராட்டு தெரிவிக்கும் வகையில் தனது டுவிட்டர் பக்கத்திலும் பதிவிட்டுள்ளார்.

அதன்படி ஐ.நா மினுஸ்மா நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமைதிகாக்கும் குழுக்களின் தளங்களை சென்றடைவதற்கான பாதைகள் மிகவும் தூரமானதும் கடினமாதுமாக அமைந்திருந்தாலும் இலங்கை அமைதிகாக்கும் குழுக்களின் பணிகளை அங்கிகரிக்கும் விதமாகவே அவர்களின் அணிவகுப்பு நிகழ்வில் கலந்துகொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




இந்த ஆட்சி தொடரும் வரை

# பிரச்சினைகளும் பின்தொடரும்

எஸ்.கணேசன்



“இந்த ஆட்சி தொடரும்வரை நாட்டில் பிரச்சினைகளும் தொடரும் எனத் தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன், எனவே, ஆட்சி மாற்றத்துக்கு மக்கள் தயாராக வேண்டும் என்றார்.

நுவரெலியாவில் நேற்று (14) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டு மக்கள் தற்போது சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இதற்கு கொரோனா காரணம் அல்ல. ஏனெனில் எமது நாட்டில் மட்டும் கொரோனா பரவவில்லை. கொரோனாவால் பெரிதும் பாதிக்கப்பட்ட அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பொருளாதாரம் மேம்பட்டுள்ளது. ஊழல் ஆட்சி மற்றும் முறையற்ற முகாமைத்துவம் காரணமாகவே எமது நாடு முன்னேறாமல் உள்ளது.

குறிப்பாக சேதன பசளையை நோக்கி நகரும் முடிவு ஓரிரவில் எடுக்கப்பட்டதாகும். இவ்வாறான முடிவுகள் நீண்டகாலத்தை அடிப்படையாகக்கொண்டு முறையாக எடுத்திருக்க வேண்டும். ஆனால் இங்கு என்ன நடந்தது? உலக சந்தையில் உர விலை குறைந்திருந்த சமயம், உர இறக்குமதிக்கு தடை செய்யப்பட்டது. தற்போது விலை அதிகரித்து உள்ளது. இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கம்பனிகள் இலாபம் அடைந்துள்ளன.

இந்த அரசாங்கம் தொடரும்வரை துன்பமும் தொடரும். ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றில் இன்று கையை வைத்துள்ளனர். எனவே, மக்கள் இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க தயாராக வேண்டும். அப்போதுதான் நாட்டுக்கு விடிவு பிறக்கும் என்றார்.

பொதுப் போக்குவரத்தில் பயணிப்போருக்கு

# தடுப்பூசி அட்டை கட்டாயம்

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

எப்.முபாரக்

கிழக்கு மாகாணத்தில் பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்பவர்கள், கொவிட்-19 தடுப்பூசி அட்டையை வைத்திருக்குமாறு, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், நேற்று (14) தெரிவித்தார்.

இராணுவம் மற்றும் சுகாதாரப் பிரிவினரால் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாகாணங்களில் பொது இடங்களிலும், பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்யும் பயணிகளிடமும், தடுப்பூசி அட்டைகள் சோதிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது கிரமமான முறையில் இராணுவத்தினரால் கிராம சேவகர் பிரிவுகள் தோறும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதுடன், இதுவரை பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள், உடனடியாக தங்களுக்கான தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.




சந்தைத் தொகுதிகளில், சன நெருக்கமான பொது இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களிடம் கொவிட் 19 தடுப்பூசி அட்டை உள்ளதா என சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தோறும் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது மக்கள் கணிசமாக ஒன்றுகூடுவதாகவும் முகக்கவசம் அணியாமலும், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமலும் கவனயீனமாக நடந்துகொள்வதை காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து நடந்து கொண்டால் எதிர்காலத்தில் பாரிய பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே, இவற்றை கருத்திற்கொண்டு, மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

செல்வாக்கு உள்ளவர்களைக் கருவிகளாக பாவித்து

# கனிய மணல் அகழ்வு

எஸ்.றொசேரியன் லெம்பேட்




உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து, உரிமங்களைப் பெற்று, கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை அவுஸ்திரேலிய கம்பெனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம். இந்த மணல் அகழ்வால் இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு எந்த நன்மைகளும் இல்லை என, 'மன்னார் சுற்றாடலை பாதுகாப்போம்' அமைப்பினர் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர்.

மன்னாரில் நேற்று (14) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அந்த அமைப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், "மன்னாரில் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக கனிய மணல் ஆய்வுகள் மிகவும் இரகசியமான முறையில், அவுஸ்திரேலிய நிறுவனத்தால் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மன்னாரிலுள்ள சுற்றாடலை பாதுகாப்போம் அமைப்பு பெற்றுக்கொண்ட தகவல்கள் அடிப்படையில், மதத் தலைவர்கள், பிரஜைகள் குழு, பொதுமக்கள் இணைந்து எமது எதிர்ப்பை வெளியிட்டு, ஜனாதிபதி வரை தெரிவித்திருக்கிறோம்.

"அண்மையில் எங்களோடு கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், எங்களுடைய ஆதங்கங்களை கேட்டு, இந்த மாதத்தின் இறுதியில் அவுஸ்திரேலிய தூதருடன் மன்னாரில் உள்ள எமது குழுக்களையும் இணைத்து, பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

"இந்த மணல் அகழ்வுகள் தொடருமாக இருந்தால் கடலுக்குள் மூழ்கி மன்னார் மாவட்டம் செயலிழந்து சூனியப் பிரதேசமாக மாறிவிடும். ஆகவே, எங்களால் முடிந்த அளவு மக்களைத் திரட்டி, அரசு அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி வரை எங்களுடைய ஆதங்கத்தை தெரியப்படுத்துகிறோம். தொடர்ந்து தெரியப்படுத்துவோம்.

"ஆனால், தாங்கள் எந்த அளவுக்கு எதிர்ப்புகளை தெரிவிக்கின்றோமோ அந்த அளவிற்கு அவுஸ்திரேலிய நிறுவனம், இதை ஆய்வு செய்வதில் முனைப்புக் காட்டி வருகிறார்கள்.

"எமது எதிர்ப்புகளால் புவிச்சரிதவியல் திணைக்களம் இதற்கான உரிமத்தை நிறுத்தி இருந்தது. ஆனால், தற்போது ஆராய்ச்சி செய்வதற்கு புவிச்சரிதவியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. அது எவ்வாறு நடைபெற்றது என்பதை எங்களால் அறிய முடியாமல் இருக்கிறது.

"இதில் மிகவும் வேதனையான விடயம் என்னவென்றால், இந்தக் கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற உயர் அரச அதிகாரிகளுக்கு எதுவும் தெரியாது என்று கை விரிக்கின்றார்கள்.

"எது எப்படி இருந்தாலும் உயர் அரச மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களை கருவிகளாக பாவித்து தான், இந்த உரிமங்களை பெற்று கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை அவுஸ்திரேலிய கம்பெனி தொடர்வதாக நாங்கள் அறிகிறோம்" என்றனர்.

திருகோணமலை மாவட்ட

## உதவி அரசாங்க அதிபராக நிருபா நியமனம்

ஒலுமுதீன் கியாஸ், அ.அச்சுதன், எப்.முபாரக், ஹஸ்பர்



திருகோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபராக எஸ். நிருபா நியமிக்கப்படுள்ளார்.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, நிர்வாக சேவை உள்ளக பயிற்சிகளை முடித்துக்கொண்டதன் பின்னர் இந்நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர், இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானமும் போசாக்கும் துறையில் ஆரம்ப பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

## பாலத்தை ஊடறுத்த வெள்ளம்...





தொடர்ச்சியாகப் பெய்துவரும் பலத்த மழை காரணமாக, மூதூர் - கட்டைபறிச்சான் இறால் பாலத்தை ஊடறுத்து வெள்ளநீர் பாய்ந்தோடுகின்றது.


இதனால் இவ்வீதியூடாகப் பயணம் செய்வோர் மிகுந்த அசௌகரியங்களுக்கு மத்தியில் பயணித்து வருகின்றனர்.

இவ் வீதியூடாக பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், கணேசபுரம், அம்மன்நகர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள், மூதூர் நகருக்கு தினந்தோறும் பயணம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: தீஷான் அஹமட்)

ஆசிரியர் இடமாற்றத்தில்

## சமூக நீதி இல்லை




ஒலுமுதீன் கியாஸ்

கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பிரிவில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப படிவங்கள், வலயத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், ஒரே பாடசாலையில் எட்டு வருடங்களை பூர்த்தி செய்த ஆசிரியர்கள், குறித்த பாடசாலை அதிபர் ஊடாக அவற்றை பூர்த்தி செய்து வலயக்கல்வி பணிமனைக்கு சமர்ப்பிக்குமாறு, வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, கடந்த காலங்களில் கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களில் சமூக நீதி பேணப்படவில்லை எனவும், அரசியல், கட்சி, நட்பு, பதவி நிலை, உறவுமுறை போன்ற விடயங்கள் ஆதிக்கம் செலுத்தியதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தேசிய ரீதியில் கிண்ணியாவின் கல்வி வளர்ச்சி தொடர்ந்து கடைசி நிலையில் இருப்பதற்கு பாடசாலை தேவை கருதி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படாமையும் ஆசிரியர் வளங்கள் சமமாகப் பகிரப்படாமையும் ஒரு முக்கிய காரணம் என புத்திஜீவிகளும் சமூக அமைப்புகளும் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றன.

கொரோனா சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்கள் கிண்ணியா கல்வி வலயத்தில் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது வருடாந்த இடமாற்றத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே, புதிய வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற இந்த இடமாற்றங்களில் சமூக நீதி பேணப்பட வேண்டுமென ஆசிரியர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வானிலை மாற்றங்களால்

## கடற்றொழில் கடும் பாதிப்பு

பாறுக் ஷிஹான்

தற்போது ஏற்பட்டுள்ள திடீர் வானிலை மாற்றங்கள் காரணமாக, அம்பாறை மாவட்டத்தில் மீனவர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் காலை முதல் மாலை வரை மப்பும் மந்தாரமுமாக இருப்பதுடன், இடையிடையே கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் கடற்றொழிலாளர்கள் கடலுக்கு செல்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கினர்.

குறிப்பாக பெரியநீலாவணை, சாய்ந்தமருது, மருதமுனை, பாண்டிருப்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், ஒலுவில் போன்ற பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரித்து கடல் அலைகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதாலும் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான வானிலை மாற்றங்களாலும் கடலரிப்பு அதிகமாக ஏற்படுவதாலும் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.



வல்லிபுர ஆழ்வார் கோவில்

## தேர்த் திருவிழா இன்று

எஸ்.தில்லைநாதன்

பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பிலவ வருடத்துக்கான தேர்த் திருவிழா, இன்று செவ்வாய்க்கிழமை (15) காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனையடுத்து சமுத்திர தீர்த்தத் திருவிழா, நாளை புதன்கிழமை (16) பிற்பகல் 4 மணிக்கு கற்கோவளம் பகுதியில் உள்ள வங்கக் கடலில் நடைபெறவுள்ளது.

கடந்த 1ஆம் திகதி வருடாந்த பெருந் திருவிழா கொடியேற்றத்துடன், ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

கண்டாவளைக்கு

## பொறுப்பு வைத்திய அதிகாரி நியமனம்

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரியாக கரைச்சி பிரதேச பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் கஜேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தெரிவித்துள்ளது.

கண்டாவளை பிரதேசத்தின் மருத்துவ சேவைகளை இலகுபடுத்தும் வகையிலும், நிர்வாக செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுக்கும் வகையிலும் இந்நியமனத்தை மேற்கொண்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கண்டாவளை பிரதேசத்தின் மேலதிக பொறுப்பு வைத்திய அதிகாரியாக டொக்டர் பிரியந்தினி கமலசிங்கம் கடமையாற்றி வருகின்றார்.

இந்நிலையில், நேற்று (14) முதல் அமலாகும் வகையில் டொக்டர் கஜேந்திரா, கரைச்சிக்கும் மேலதிகமாக கண்டாவளைக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள்

## மன்றத்துக்கு புதிய உதவி பணிப்பாளர் நியமனம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் பணிமனையின் புதிய உதவிப் பணிப்பாளராக ரி.பூலோக ராஜா, நேற்று (14) காலை 10.30க்கு உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்று கொண்டார்

1998 ஆண்டு தொடக்கம் மன்னார் இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரியாகவும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாகவும் பணிபுரிந்த நிலையில் பதவி உயர்வு பெற்று, உதவிப் பணிப்பாளராக பொறுப்பேற்று கொண்டார்.

இந்தப் பதவி பிரமாண நிகழ்வு, மத தலைவர்களின் நல்லாசியுடன், இளைஞர் சேவை அதிகாரிகள் இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச, மாவட்ட சம்மேளன பிரதிநிதிகள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.



## ரிஷாட் எம்.பியின் முல்லைத்தீவு விஜயம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, 04 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பொது சமூக சேவைகள் அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியையும் அத்தியாவசிய உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்ற அவர், அங்குள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.



## உளுந்து அறுவடை பாதிப்பு

வவுனியாவில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக, உளுந்து செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். இலங்கையில் அதிக உளுந்து உற்பத்தியாகும் மாவட்டங்களில் ஒன்றாகிய வவுனியா மாவட்டத்தில் தற்போது உளுந்து அறுவடை இடம்பெற்று வருகின்றது. எனினும் சீரற்ற வானிலை காரணமாகவும், கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையாலும் பலர் உளுந்து அறுவடையை மேற்கொள்ள முடியாமல் உள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் விதைத்து 3 மாதமாக காத்திருந்து, அறுவடைக்கு தயாரான உளுந்து பயிர்கள், மழை காரணமாக பாதிப்படைந்து வருகின்றது. இதனால் பலரும் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அமைச்சரவைப் பத்திரத்தை

# திகாம்பரம் சமர்ப்பிக்கவில்லை

## தகவல் அறியும் சட்டம் உறுதி செய்தது என்கிறார் திலகர்

நுவரெலியாவில் புதிய பிரதேச செயலகங்களை அமைப்பதற்கு 2019ஆம் ஆண்டு மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சராக இருந்த பழனி திகாம்பரம் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தாகத் தெரிவிக்கப்படும் விடயம் போலியானது என, நுவரெலிய மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.



இந்த விடயம், தகவல் அறியும் சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"உப பிரதேச செயலகங்களை உருவாக்க அரச ஆணை எதுவும் இல்லை என்பதுவும் உறுதி செய்யப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

மக்கள் மனு கையெழுத்து இயக்கத்தின் தலைநகர் கொழும்புச் செயற்பாடுகளிடையே இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்துரைக்கையலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அத்தகைய அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கும் அதிகாரம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கே உள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி மலையக அரசியல் அரங்கத்தின் செயலாளர் நா. கிருஷ்ணகுமார் கேட்டிருந்த கேள்விகளுக்கு பதில் அளித்துள்ள அமைச்சரவை அலுவலகம், எழுத்து மூலமாக எமக்கு அறிவித்துள்ளது.

அத்துடன், உப பிரதேச செயலகங்களை உருவாக்கவும் அரச ஆணை எதுவும் இல்லை என்பதுவும் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சே அதற்கு பதில் தர வேண்டும் எனவும் அமைச்சரவை அலுவலகம் அறிவித்துள்ளது. எனவே அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உப பிரதேச செயலகங்கள் அமைக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

எனவே பகிரங்க உரிமை மீறலான இந்த விடயத்தை, உரிய விதத்தில் சக சமூகங்களிடத்திலும் அரசாங்கத்திடமும் முன்வைத்து உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க, மலையக அரசியல் அரங்கம் முன்னெடுக்கும்போது, பாசாங்கு வார்த்தைகளைப் பேசி, மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பதுளை குப்பை மேட்டுக்குத் தீர்வாக

## புதிய திறந்தவெளி

■ நடராஜா மலர்வேந்தன்

பதுளை குப்பை மேட்டுக்குத் தீர்வாக அமைக்கப்படவுள்ள புதிய திறந்தவெளியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கண்டறிய, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் கள ஆய்வு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆலோசனையின் பேரில் குப்பை மேட்டை, விஞ்ஞான ரீதியாக அகற்றி, அதே இடத்தில் இந்தத் திறந்தவெளி அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையாக நிர்வகித்து, துறைசார் பிரிவினரின் ஆலோசனையுடன் பொதுமக்கள் கூடுதல் பயன்பெறும் விதமாக, இதனை மாற்றியமைப்பது தொடர்பில் மாநகர மேயருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

அத்துடன், திறந்த வெளியைச் சுற்றியும் நடைபாதையை அமைப்பது தொடர்பிலும் இதன்போது ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.



## மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன





தலவாக்கலை- லிந்துலை பிரதேச சமுர்த்தி பயனாளிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் தலவாக்கலை- லிந்துலை நகரசபை மண்டபத்தில் வைத்து நேற்று (14) வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன், தலவாக்கலை- லிந்துலை நகர சபைத் தவிசாளர் லெச்சுமன் பாரதிதாஸன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (பி. கேதீஸ்)



கொரோனாவால் நிறுத்தப்பட்ட பஸ் சேவைகளை

## மீண்டும் ஆரம்பிக்கவும்

■ என். ஆராச்சி

கொரோனா தொற்று காரணமாக கைவிடப்பட்டுள்ள இ.போ.ச பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு புளத்கொஹூபிட்டிய பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

புளத்கொஹூபிட்டியவை அண்மித்த பல பகுதிகளுக்கான இ.போ.ச பஸ் சேவையானது, கொரோனா தொற்றையடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கேகாலை பஸ் டிப்போ மூலம் முன்னெடுக்கப்பட்ட கெட்டியமுல்ல- மல்வானை ஊடாக கேகாலை மற்றும் கேகாலையிலிருந்து எலகல்ல, அவிசாவளை பஸ் டிப்போ மூலம் முன்னெடுக்கப்பட்ட புளத்கொஹூபிட்டியவிலிருந்து வேகல்ல போக்குவரத்து சேவைகளை மீண்டும் முன்னெடுக்குமாறே பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## துடிக்காமல் நிற்கும் டிஜிட்டல் கடிகாரம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை நகர மத்தியில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டு கோபுரத்திலுள்ள டிஜிட்டல் கடிகாரமானது, பல வாரங்களாக செயலிழந்து காணப்படுகின்றது.

குறித்த கடிகாரம் செயலிழந்து பல வாரங்கள் கடந்தும் அதற்கு பொறுப்பான நிறுவனம், அதனை செயற்படுத்துவதற்கு இன்னும் முன்வரவில்லை என்றும் பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.



மொனராகலை மாவட்ட வைத்தியசாலைக்கு

## சுகாதார அமைச்சர் விஜயம்

■ சுமணசிறி குணதிலக

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, மொனராகலை மாவட்ட வைத்தியசாலைக்கான கண்காணிப்பு விஜயம் ஒன்றை நேற்று முன்தினம்(13) மேற்கொண்டிருந்தார்.

அந்த வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஐந்து மாடிக் கட்டடத்தை பார்வையிட்ட அவர், அதன் நிர்மாணப் பணிகளை விரைவுப்படுத்தமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

மேலும் வைத்தியசாலையில் நிலவும் தற்போதைய பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பதாக தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, குறித்த வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.



இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையின்

## நேச அடையாளம் 'கந்தசாமி சேர்'



அமரர் ராஜன் கந்தசாமி, இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையின் நேச அடையாளமாக திகழ்ந்தவர் என நிகர் சமூக கலை இலக்கிய அரங்கத்தில் பிரதான அமைப்பாளர் அ.லெட்சுமணன் தெரிவித்துள்ளார்.

ராஜன் கந்தசாமி நேற்று முன்தினம் (13) அமரத்துவம் அடைந்தார். அவரது மறைவையொட்டி விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து தொழில் நிமித்தம் நாவலப்பிட்டிக்கு இடம்பெயர்ந்த அமரர், நாவலப்பிட்டி மண்ணிலேயே மிக நீண்டகாலம் வாழ்ந்தார்.

உடற்கல்வி ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய அவர், பிரதேசத்தின் விளையாட்டு துறை வளர்ச்சியில் முக்கியத்துவம் பெற்றவராக விளங்குகிறார். சென் மேரிஸ் கல்லூரியின் வளர்ச்சியிலும் அன்னாரின் பங்குபற்றுதல் போற்றுதற்குரியதாகும்.

நாவலப்பிட்டியில் மூவின சமூகத்தின் பேரன்பை பெற்ற பெயராகவே 'கந்தசாமி சேர்' என்ற நாமம் விளங்குகிறது. விளையாட்டின் மீது அதீத ஆர்வம் கொண்டவராதலால், இவரை எப்போதும் ஜயதிலக்க விளையாட்டு மைதானத்தில் காணலாம்.

மூவினத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்களை பயிற்றுவிப்பதிலும் வழிப்படுத்துவதிலும் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். பாடசாலை இல்ல விளையாட்டு, பிரதேச விளையாட்டு, கிராம உத்தியோகத்தர் பிரிவு விளையாட்டு, வட்டார விளையாட்டு உள்ளிட்ட போட்டிகளிகளில் தவிர்க்க முடியாத நடுவராக திகழ்ந்துள்ளார்.

மனித நேயத்தை வலியுறுத்தும் அடையாளமாக திகழ்ந்தவர். அன்னாரின் இழப்பு நாவலப்பிட்டி பிரதேச விளையாட்டுத் துறையில் பாரிய வெற்றிடத்தை உருவாக்கி உள்ளது. இத்துறை ஈடுபாட்டால் மனிதர்களோடு பழகத் தெரிந்த மிகச் சிறந்த மனிதராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. வேறுப்பாடுகள் கடந்து எல்லா மக்களாலும் நேசிக்கப்பட்டவராகவும், எல்லா மக்களையும் நேசித்த ஒருவராகவும் இவரது வாழ்வு சிறப்பு பெற்றுள்ளது.

இந்தப் பின்னணியில், இவரது சமூக சமய செயற்பாடுகளும் தெளிவாகிறது. எல்லா வயதினரோடும் சகஜமாக பழகும் பண்பு இவருக்கு நிகர் இவரே ஆகும். வசதி, அந்தஸ்து என்ற பேதங்களைக் கடந்து, சகலரையும் மதிக்கின்ற பண்பில் இவரது தனித்துவம் சிறப்பிற்குரியதாகும்.

அன்னாரது மறைவையொட்டி இயற்கை சூழல் அமையப் பெற்ற ஜயதிலக மைதானத்தை மையப்படுத்திய நாவலப்பிட்டி மலை முகடுகள் எங்கும் சோகமயமாக காட்சி தருகிறது. அன்னாரின் மறைவை வேதனையோடு நாவலப்பிட்டி மக்கள் உணர்கிறார்கள். விளையாட்டுப் போட்டிகளில் ஆரம்பிப்பாளராக 'ஒனியமார்க்' என்ற கம்பீரமாக எதிரொலிக்கின்றது. தான் பிறந்த மண்ணை போலவே, தான் வாழ்ந்த நாவலப்பிட்டியையும் நேசித்த பெருமகனாக இவரைக் காண்கின்றோம்.

நாவலப்பிட்டி மண் சார்பாக அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, துயருறும் நாவலப்பிட்டி மக்களோடும் இவரால் வியாபகம் பெற்று தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் விளையாட்டுத்துறை ஈடுபாட்டால் அவரை நேசித்த உள்ளங்களையும், ஆழ்ந்த துயரத்தை, நிகர் சமூக கலை இலக்கிய சங்கத்தின் சார்பாக பகிர்ந்து கொள்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அத்தியாவசிய சேவைகளும் நிர்க்கதிக்கு உள்ளாகும் மக்களும்

அரசாணையை பிறப்பித்து, அதில் மீளத் திருத்தங்களைச் செய்துகொள்ளல், இன்றேல் வாபஸ் பெற்றுக்கொள்ளும் அரசாங்கத்தில், ஆட்சியிலிருக்கும் அரசாங்கமே அதற்கு நிகரென்பது, கடந்தகாலங்களில் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாணைகளைத் திரும்பிப் பார்த்தால் தெட்டத்தெளிவாகும்.

தொழிற்சங்க போராட்டங்களை கட்டுப்படுத்த முடியாத போது, 'அத்தியாவசி சேவை' எனும் ஆயுதத்தைத் தனது கைகளில் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். இரண்டொரு மாதங்களுக்கு முன்னரும், அத்தியாவசிய சேவைகள் எனும் தலைப்பின் கீழ், பல அரசாணைகள் வெளியிடப்பட்டன. அவ்வாறானவை இன்னும் நடைமுறையில் இருக்கின்றனவா, இல்லையா? என்பதெல்லாம், அந்தந்த் துறைகளைச் சார்ந்தவர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் குதிக்கும் போதுதான் வெளிச்சத்துக்கு வரும்.

ஜனாதிபதி, பெப்ரவரி 12ஆம் திகதியன்று வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில், மின்சார விநியோகம், வைத்தியசாலை, மருத்துவ விடுதிகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் இதனுடன் ஒத்ததான நோயாளர் பராமரிப்பு சேவைகள், வரவேற்பு, உபசரிப்பு மற்றும் சிகிச்சை ஆகியவை தொடர்பிலான அனைத்து அவசியமான சேவைகள் மற்றும் தொழில்கள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், 12 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, 18 தொழிற்சங்களால் கடந்த 7ஆம் திகதியிலிருந்து முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டங்கள், நேற்றும் தொடர்ந்தன. ஆக, அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டதன் அர்த்தம் புரியாமல், மக்களும் நோயாளர்களும் அவதிப்பட்டுக்கொண்டும், திண்டாடிக்கொண்டும் இருக்கின்றனர்.

தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு, இது உசிதமான காலமல்ல என்பதை, சகலரும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். மிக நெருக்கடியான காலக்கட்டத்தில், கழுத்தை நெரித்து, தங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயல்வது உசிதமான செயற்பாடாக அமையாது.

அதேபோல, தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காது, அதிரடியாகத் தீர்மானங்களை எடுத்துள்ளோமென நிரூபிக்கும் வகையில், அரசாணையைப் பிறப்பித்து, அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்குவதும் நல்லதல்ல. பணியாளர்களும் பொதுமக்களும் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில், ஆட்சியாளர்கள் மிகக் கவனமாகத் தீர்மானங்களை எட்டவேண்டும். இல்லையேல், சாதாரண பொதுமக்களே பாதிக்கப்படுவர்.

மின்சார சேவையும் அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறான நெருக்கடியான நேரங்களிலும் பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை சீராக விநியோகிக்கும் மின்சார சபையினர், மின்னுற்பத்தியில் ஏற்பட்ட நெருக்கடியால், மின்சாரத்தை முறையாக விநியோகிக்க முடியாமல் திணறுகின்றனர். அட்டவணையிட்டு மின்வெட்டு அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் ஆறு மணித்தியாலங்கள் மின்வெட்டு அமல்படுத்தப்படுமென தகவல்கள் கசிந்துள்ளன. இவ்வாறான நிலையில், மின்சாரத்தை அத்தியாவசிய சேவைகளுக்குள் உள்ளடக்குவதில் எவ்விதமான அர்த்தமும் இல்லை.

தீர்க்கதரிசனமாகச் சிந்தித்து தீர்மானத்தை எட்டியுள்ளோம் என மார்த்தட்டிக்கொள்ளலாம். அப்படியாயின், சகல தொழிற்றுறைகளையும் அத்தியாவசி சேவைக்குள் உள்ளடக்கவேண்டிய நிலைமையே ஏற்படும். இது ஆட்சியாளருக்கு அழகல்ல என்பதை நினைவூட்டுகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

எல்லோரும் எமக்குச் சொந்தமும் இல்லை. ஆனால், பழகும்போது யாவரும் உறவாகவே எமக்குப் புலனாகின்றனர். பூமித் தாய்க்குப் பேதம் தெரியாது. மனிதர் யாவரும் எமக்கானவர்கள் என எண்ணினால், உலகம் அவர்களை எளிதாக ஏற்றுக்கொண்டுவிடும். அனைத்து மனிதர்களும் ஒரே இனம் என வாயளவில் சொல்லக்கூடாது.

பேத உணர்வே புவனத்தில் பெரும் கரும்புள்ளியாகும். உள்ளுணர்வினுள் உயிர்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் சாதாரணமானது அல்ல! பரந்த மனம் இல்லாதவர்கள், அரசியல்வாதிகளாகவோ மதத் தலைவர்களாக இருத்தலாகாது. இவர்களைப் போன்றவர்கள், வாய்மையற்றவர்கள்; மக்களைத் திசைதிருப்புபவர்கள்.

இன்னமும் மக்கள் மயக்க நிலையில்த்தான் இருக்கிறார்கள் போல் உள்ளது. தாங்கள் சார்ந்தவை மட்டுமே உயர்வானவை என எண்ணுகின்றார்கள். இது பொய்மையின் விம்பம். எல்லா மனித தேகமும் ஒரே மாதிரியாகத்தான் படைக்கப்பட்டன. ஆனால் ஆணவம் அவைகளுக்குள் புகுந்து கொள்கின்றது. உலகம் ஏகம்; ஏது பேதம்?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சுதந்திரபுரத்தில் நிலக்கடலை செய்கை மழையால் அழிவு

முல்லைத்தீவில் கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால், புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட சுதந்திரபுரம் கிராமத்தில் 600 ஏக்கர் வரையான நிலக்கடலை செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

சுதந்திரபுரம் கிராமத்தில் 1,500 ஏக்கர் வரையில் மேட்டுநில பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டபோதும் 1,200 ஏக்கர் வரையில் நிலக்கடலை செய்கையை மேற்கொண்டுள்ளார்கள். தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

நிலக்கடலைச் செய்கை, மிளகாய்ச் செய்கை, பூசணிசெய்கை, வெங்காயசெய்கை போன்ற செய்கைகளை மேற்கொண்ட விவசாயிகளின் விளைபயிர்கள் மழைவெள்ளத்தால் அழிவடைந்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள மிகுந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், அதிகளவான விவசாயிகள் கடன்பெற்று அடகுவைத்து, நிலக்கடலை செய்கையை மேற்கொண்டுள்ள நிலையில், பயிர்கள் மழைவெள்ளத்தால் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

நிலக்கடலைக்கு நல்ல விலை காணப்படுகின்றது. ஓர் அந்தர் 22ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்ற நிலையில், நெல்லில் அழிவைச் சந்தித்த விவசாயிகள், மேட்டுநிலப் பயிராக நிலக்கடலையை மேற்கொண்டநிலையில், இயற்கை அனர்த்தத்தால் அழிவை சந்தித்துள்ளார்கள். இந்த அழிவுக்கு அரசாங்கம் இழப்பீடு தரவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

– செ. கீதாஞ்சன்

முஸ்லிம் அரசியல்

# தலைவர்களா, முதலாளிகளா?

மொஹமட் பாதுஷா

இன்றைய நிலைவரப்படி, பொதுவாக நாட்டில் தலைவர்கள் என்று யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. மக்களை வழிநடத்தி, அவர்களுடைய பிரச்சினைகளை மனதிற்கொண்டு, அவர்களுக்காகவே தம்மை அர்ப்பணிக்கின்ற நல்ல தலைவர்களை, நிகழ்காலம் இழந்திருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

கிட்டத்தட்ட இதுதான் எல்லா சமூகங்களின் நிலையும் ஆகும். ஆனால், முஸ்லிம் சமூகத்தில் இந்தப் பிரச்சினை தீவிரமாக உள்ளது. முஸ்லிம்களின் தற்போதைய தலைவர்கள் யார் என்று புரியவில்லை? அடுத்த தலைவர்கள், யாராக இருக்கப் போகின்றார்கள் என்பதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

தலைவர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் மிகப் பெரிய வேறுபாடு இருக்கின்றது. ஒரு முதலாளி, தனது ஊழியர்களிடம் எல்லாப் பணிகளையும் சுமத்தி விட்டு, அதில் இருந்து கிடைக்கின்ற பலாபலன்களை மட்டும் தனது கஜானாவுக்குள் நிரப்பிக் கொள்கின்றார்.

ஆனால், உண்மையான தலைவர்கள் ஒரு சமூகத்தின் சுமைகளை எல்லாம், தமது முதுகில் ஏற்றிக் கொண்டு, முன்னின்று சமூகத்தை வழிநடத்திச் செல்வார்கள். தன்னைப் பின்தொடர்கின்றவர்களை, சரியான பாதையில் அழைத்துச் செல்வது, தமது கடமை என உணர்வார்கள்.

தலைவர்கள் தம்மைச் சுற்றியுள்ள சமூகத்தின் முன்னேற்றம் பற்றி ஒட்டுமொத்தமாகச் சிந்திக்கின்றார்கள். இருப்பினும், முதலாளிகள் எனப்படுவோர், தமது சொந்த வெற்றி, முன்னேற்றம் பற்றி மட்டுமே சிந்திக்கின்றார்கள்.

அந்தவகையில், நாட்டு மக்களைப் பற்றிச் சிந்திக்காத பெருந்தேசிய தலைவர்கள், இன்று அதிகரித்துள்ளனர். சிறுபான்மை அரசியலிலும் இந்நிலையை வெகுவாக அவதானிக்க முடிகின்றது.

தமிழர் அரசியலில் ஓரளவுக்கு தலைவர்கள் என்று வரையறுக்ககூடிய பண்புகளைக் கொண்ட ஓரிருவர் இருக்கின்றார்கள். ஆனால், அடுத்த தலைவர்கள் யார் யார் என்ற கேள்விக்கும், தமிழர் அரசியலில் இன்னும் விடையில்லை.

முஸ்லிம் அரசியலைப் பொறுத்தமட்டில், நிகழ்காலத்திலும் எதிர்காலம் தொடர்பாகவும் இந்தக் கேள்வி இருக்கின்றது. சரியான முஸ்லிம் தலைமைகள் யார் என்ற கேள்வி, அரசியலுக்கு மட்டுமானதல்ல; அதற்கப்பால் சமய, சிவில் சமூக பரப்புகளிலும் நீட்சி கொள்கின்றது.

இலங்கைவாழ் ஒட்டுமொத்த முஸ்லிம்களை அல்லது முக்கால்வாசிக்கும் அதிகமான முஸ்லிம்களை, அரசியல் ரீதியாகத் திரம்படக் கூட்டிச் செல்கின்ற தேசிய தலைவர்கள், யார் என்று தெரியாமலேயே முஸ்லிம்களுக்கான அரசியல் கால்நூற்றாண்டாகப் பரிதவிக்கின்றது.

அதுபோலவே, எதிர்காலத்தில் அதாவது இதற்குப் பின்னர் வரப் போகின்ற தலைவர்கள் யார் என்ற கேள்வியும், இப்போது முஸ்லிம்கள் முன் உள்ளது. ஏனெனில், அப்படியான அபூர்வ ஆளுமைகள், நம்பிக்கை நட்சத்திரங்கள் யாரையும் முஸ்லிம் சமூகத்தை ஆட்கொண்டுள்ள நிகழ்கால அரசியலில் காணக் கிடைக்கவில்லை.

மக்களைப் பயன்படுத்தி அரசியல் செய்கின்ற அரசியல் முதலாளிகளே, இன்று முஸ்லிம் அரசியலில் நிரம்பி வழிகின்றார்கள். இவர்கள் மக்களது முதுகின் மேல் ஏறி, தேர்தல் எனும் ஆற்றைக் கடக்கின்றார்களே தவிர, சமூகத்தை வழிநடத்தும் எண்ணமோ அருகதையோ இவர்களுக்கு எள்ளளவும் கிடையாது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

ஓர் ஆசிரியர் என்றால், அவர் கற்பிக்க வேண்டும். ஒரு மருத்துவர் என்றால், அவர் சிறிய நோய்களையாவது குணப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்; குறைந்தபட்சம் அதற்காக முயற்சி எடுக்க வேண்டும்.

அதுபோல, ஒரு தலைவர் என்றால், அந்தச் சமூகத்தை வழிநடத்துபவராகவும் அச்சமூகத்துக்காகப் பாடுபடுபவராகவும் இருக்க வேண்டும். இப்படியான பண்பைக் கொண்டிராத யாரையும், ஆசிரியர் என்றோ, வைத்தியர் என்றோ, தலைவர் என்றோ ஏற்றுக் கொள்வது கடினமாகும்.

இன்று, நான்குக்கும் குறையாத முஸ்லிம் கட்சிகளும் தலைவர்களும் உள்ளனர். இதில் சிலர், தேசியத் தலைவர்கள் என்ற அடைமொழியால் அழைக்கப்படுகின்றனர். வேறுசிலர், தம்மைப் பிராந்தியத் தலைவர்களாக முன்னிறுத்த பிரயாசைப்படுகின்றனர்.

பெரிய அரசியல்வாதிகள், தம்மை முஸ்லிம் சமூகத்தின் ஏக தலைவர்களாக கற்பனை செய்து கொள்வது ஒருபுறமிருக்க, முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் பற்றிய எந்தப் பிரக்ஞையும் இல்லாத 'டீல்' மன்னர்கள் மற்றும் நேற்றுப் பெய்த மழையில் முளைத்த எம்.பிக்களும் கூட, தம்மை தலைவர்கள் என்று நினைத்துக் கொள்கின்ற அபத்தம், முஸ்லிம் அரசியலில் மட்டுந்தான் நடக்கின்றது.

ஆனால், தம்மைத் தலைவர்கள் என்று எண்ணி, கனவுலகில் மிதக்கின்ற இவர்கள் எல்லோரும் அந்தக் கட்சியின், ஒரு கூட்டத்தின், ஓர் ஊரின், நான்கைந்து 'பேஸ்புக்' போராளிகள் மற்றும் எடுபிடிகளின் தலைவர்களாக இருக்கின்றார்களே தவிர, நிஜத்தில் அவர்கள் எந்தத் தருணத்திலும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஏக தலைவர்களாகத் தம்மை முன்னிறுத்தத் தவறிவிட்டார்கள்.

முஸ்லிம்களுக்கு நீண்டகாலப் பிரச்சினைகள், அபிலாஷைகள் உள்ளன. குறுங்கால அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட வேண்டிய எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. இனப்பிரச்சினை தீர்வு, புதிய அரசியலமைப்பு, தேர்தல் முறைமை, மனித உரிமை மீறல்கள் என நாட்டில் பேசப்படுகின்ற ஒவ்வொரு விவகாரங்களிலும் முஸ்லிம்களுக்கு என்று ஒரு வகிபாகம் உள்ளது.

இதனை எல்லாம் கவனித்துக் கொள்வதற்காகவே, முஸ்லிம் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றார்கள், அவர்களில் சிலர், தலைவர்கள் என்ற அந்தஸ்துக்கு கிட்டிய நிலையில் வைத்து கொண்டாடப்படுகின்றார்கள்.

ஆனால், கட்சித் தலைவர்களோ, பிராந்திய தளபதிகளோ அல்லது இளம் அரசியல்வாதிகளோ, முஸ்லிம் சமூகத்தின் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றிரண்டைத்தானும் நிவர்த்தி செய்யவில்லை. ஆண்டாண்டு காலமாக மக்களை வெற்றிகரமாக ஏமாற்றும் அரசியலையே செய்து கொண்டிருக்கின்றார்கள்.

'ஒரு வைத்தியர் நன்றாக நோய் குணமாகும் விதத்தில் மருந்து கொடுக்கின்றார்' என மக்கள் கேள்விப்பட்டால், சாரைசாரையாக அவரைத் தேடிப் போவார்கள். அவர் விளம்பரம் செய்ய வேண்டியதில்லை; பொய் கூற வேண்டியதில்லை. இது அரசியலுக்கும் பொருந்தும்.

ஒரு கட்சித் தலைவர் அல்லது பிரபலமான அரசியல்வாதி, முஸ்லிம் சமூகத்திற்காக குரல் கொடுக்கின்றார் என்றால், முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றிய புரிதலுடன், அவற்றுக்கு தீர்வு காண முன்னிற்கின்றார் என்றால், மக்கள் தாமாகவே அவரைத் தலைவராக மனதளவில் ஏற்றுக் கொள்வார்கள்.

தற்கால முஸ்லிம் அரசியல்வாதிகள், இந்த அடிப்படை யதார்த்தத்தை, நுட்பத்தைக் கூட தெரியாத சுத்த சூனியங்களாகவே, காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். அதாவது, தலைவராக வருவதற்கான எந்த முயற்சியையும் அவர்கள் ஆற்ற விரும்பவில்லை. ஆனால், தலைவர் என்ற மகுடம் மட்டும் தேவைப்படுகின்றது.

அதுமட்டமன்றி, வாகனத்துக்கான வரிவிலக்கு அனுமதிப்பத்திரம் பெறுவது எவ்வாறு? அரச தங்குமிடத்தை எவ்வாறு பெறலாம்? எந்தக் கொந்தராத்தை கொடுத்தால் எவ்வளவு கொமிசன் கிடைக்கும்? அமைச்சுப் பதவி தேவையென்றால் யாரை தொடர்பு கொள்ள வேண்டும்? தொழில்களை யாரின் ஊடாகப் பெறலாம், விற்பனை செய்யலாம்? எப்படி 'பெல்டி' அடித்தால் அல்லது 'டீல்' பேசினால் என்ன 'வெகுமதி' கிடைக்கும் என்ற கணக்கையெல்லாம், நன்றாக கற்று வைத்திருக்கின்றார்கள் - சரியாகச் சொன்னால் ஒரு முதலாளியைப் போல!

இதனால், முஸ்லிம்களின் தலைவர் என்ற பதவி இன்னும் வெற்றிடமாகவே இருக்கின்றது. தற்போதைய தலைமைத்துவ இடைவெளி நிரப்பப்படாததன் காரணமாக, எதிர்காலத்தில் நல்ல தலைவர்களை உருவாக்குவதற்கான வாய்ப்பும், அவர்களை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான நிகழ்தகவுகளும் மிகவும் குறைவடைந்து செல்கின்றன.

அத்துடன், இப்போதிருக்கும் அரசியல்வாதிகள், சரியான தலைமைகளாகத் தம்மை புடம்போட்டுக் கொள்ளாததன் காரணமாக, அடுத்த தலைவர்களை அடையாளப்படுத்துவதற்குரிய தலைமைத்துவச் சங்கிலி உருவாக்கப்படவில்லை.

நல்ல எதிர்கால தலைவர்களை உருவாக்கத் தவறியமையால், இப்போதுள்ள பெரிய அரசியல்வாதிகளைப் போலவே, கொஞ்சம்கூட பொருத்தமற்ற புதியவர்கள் அரசியல் தலைவர்களாகும் கனவுகளோடு முஸ்லிம் அரசியலுக்குள் உள்நுழைகின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் பதவி, பணத்தாசை பிடித்தவர்களாகவும், குறுக்கு வழியிலேனும் முன்னேற வேண்டும் என்று நினைப்பவர்களாகவும் இருப்பதை வெளிப்படையாகவே காண முடிகின்றது. அதற்காக அவர்கள் எந்த எல்லை வரைக்கும் செல்லத் தயாராக இருக்கின்றனர்.

ஏற்கெனவே இருப்பவர்களை விட, மோசமான பேர்வழிகள் புதிதுபுதிதாக எம்.பிக்களாக, மாகாண சபை உறுப்பினர்களாக ஆகிக் கொண்டிருப்பதால், அல்லது அப்படியானவர்களுக்கே மக்கள் வாக்களிக்கும் போக்கு காணப்படுகின்றமையால், ஏற்கெனவே கெட்டு குட்டிச் சுவராகியுள்ள முஸ்லிம்களுக்கான அரசியல், இன்னும் மோசமான வழித்தடத்தில் பயணிப்பதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. முஸ்லிம் அரசியலைத் திருத்துவதற்கு, ஒவ்வொரு பொதுமகனும் முன்வராமல், வெறுமனே மாற்றம் வேண்டும் என்றும், பாடம்புகட்ட வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருப்பதால் மட்டும், எதுவும் நடந்து விடாது.

கர்நாடகா

ஹிஜாப் விவகாரம்

# பாடசாலைகள் மீண்டும் திறப்பு

கர்நாடகாவில் உடுப்பி அரசு மகளிர் பல்கலைக்கழகத்தில், கடந்த மாதம் பர்தா அணிந்து வருகை தந்த ஆறு முஸ்லிம் மாணவிகளை பல்கலைக்கழகத்தின் சீருடை விதிகளைக் காரணம் காட்டி வகுப்பறைக்குள் நுழையவிடாமல் அப் பல்கலைக்கழக நிர்வாகம் வெளியேற்றியது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தவே பல்கலைக்கழக நிர்வாகத்தைக் எதிர்த்து அம்மாணவியர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்த நிலையில் கடந்த 9ஆம் திகதி மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

இதையடுத்து கர்நாடகத்தில் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு விடுமுறை அளித்து கர்நாடக அரசு கடந்த 10ஆம் திகதி உத்தரவிட்டது.

இவ் வழக்கை விசாரித்த கர்நாடக உயர்நீதிமன்றம் பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்கு மாணவ-மாணவிகள் ஹிஜாப் அல்லது காவித்துண்டு என எந்த வித மத அடையாளங்களையும் வெளிப்படுத்தும் ஆடைகளை அணிந்து வரக்கூடாது என்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.



இந்நிலையில், கர்நாடகாவில் 10ஆம் வகுப்பு வரையிலான பாடசாலைகள் நேற்றைய தினம் திறக்கப்பட்டுள்ளன.

எனினும் சில மாணவிகள் நீதிமன்றம் மற்றும் மாநில அரசின் உத்தரவை மீறி மீண்டும் புர்கா அணிந்து வகுப்புகளுக்கு செல்லும் நிகழ்வுகளும் அரங்கேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

‘தலைவர் 169’ படத்தில்

# இரண்டு ஹீரோக்கள்?



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் ’தலைவர் 169’ திரைப்படத்தின் அறிவிப்பு அண்மையில் வெளிவந்தது. இந்தத் திரைப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க, நெல்சன் இயக்க, அனிருத் இசையமைக்க போகிறார் என்ற தகவல் ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் நெல்சன் இயக்கும் அனைத்து திரைப்படங்களிலும் பாடல்கள் எழுதும் சிவகார்த்திகேயன், பாடல் எழுதுவதோடு ஒரு முக்கிய கேரக்டரில் நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது.

சூப்பர் ஸ்டார் ரஜினியுடன் நடிக்க வேண்டும் என்பது தனது மிகப்பெரிய கனவு என ஏற்கெனவே பல பேட்டிகளில் சிவகார்த்திகேயன் கூறியிருந்த நிலையில் அந்த கனவு தற்போது நனவாகும் நிலையில் உள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல் நெல்சனின் இன்னொரு நெருங்கிய நண்பரான சிம்பு இந்த திரைப்படத்தில் ஒரு பாடல் எழுதி பாட உள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனவே ’தலைவர் 169’ திரைப்படத்தில் சிவகார்த்திகேயன் மற்றும் சிம்பு ஆகிய இரண்டு பிரபல ஹீரோக்கள் இணைய உள்ளதாக செய்தி கசிந்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியா

# அதிகமாக ஒப்பனை செய்ய வேண்டாம்

## விமானப் பணிப்பெண்களுக்கு உத்தரவு



எயார் இந்தியா விமான சேவையானது அண்மையில் டாடா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து டாடா நிறுவனம் விமான சேவையை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் விமானங்களைத் தாமதம் இன்றி இயக்குவதற்காக பணிப்பெண்கள் மற்றும் ஊழியர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை டாடா நிறுவனம் விதித்துள்ளது.

குறிப்பாக, பயணிகள் விமானங்களில் ஏறும்போது சாப்பிடுவதோ அல்லது பானங்கள் அருந்துவதோ கூடாது எனவும், சுங்கம் மற்றும் பாதுகாப்பு சோதனைகளில் தாமதம் ஏற்படுவதை தடுக்க அதிகமாக ஒப்பனை செய்ய வேண்டாம் என்றும், குறைந்த அளவிலான நகைகளை அணியவேண்டும் என்றும் விமானப் பணிப்பெண்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் சோதனைகளை விரைவாக முடிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்ட நேரத்திற்குள் பயணிகள் விமானத்தில் ஏறுவதற்கான அனுமதியை வழங்கவேண்டும் எனவும் எக் காரணத்துக்காகவும் பயணிகள் விமானத்தில் ஏறுவதை தாமதப்படுத்தக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்தியா

# மேலும் 54 சீன செயலிகளுக்குத் தடை

இந்திய இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் விளைவிக்கும் மேலும் 54 சீன செயலிகளுக்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சானது நேற்றைய தினம் (14) தடை விதித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட இச் செயலிகளில் ‘பியூட்டி கெமரா’, ஸ்வீட் செல்பி ஹெச்.டி, விவோ வீடியோ எடிட்டர், டுயல் ஸ்பேஸ் லைட் உள்ளிட்ட செயலிகள் அடங்கும்.

இதற்கு முன்னர் , சீனாவின் டிக்டொக் லைட், ஹெலோ லைட், ஷேர்இட் லைட், பிகோ லைட் உள்ளிட்ட 224 செயலிகளுக்கு இந்தியா தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கேரளா

திருமண ஊர்வலத்தில் வெடிகுண்டுத் தாக்குதல்

# ஒருவர் மரணம்





கேரளாவில் திருமண ஊர்வலமொன்றில் நிகழ்த்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேரளாவில் கண்ணூர் என்ற இடத்தில் கடந்த 2 நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற திருமண இசை நிகழ்ச்சியொன்றில் இரு பிரிவினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இவ்வாக்குவாதம் மோதலில் முடிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த திருமணச்சடங்கு முடிந்து புதுமணத் தம்பதிகளின் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது ஜிஷ்ணு என்பவரின் கும்பல் ஊர்வலத்தில் வெடிகுண்டு வீசியதாகவும் இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் 4 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னை

# பல்பொருள் அங்காடிக்குள் புகுந்த கார்



சென்னை, அண்ணாசாலை பகுதியில் இரவு நேரங்களில் அண்மைக்காலமாக கார் ஓட்டப் பந்தயங்கள் அதிகளவில் இடம்பெற்றுவருவதாகக் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு (13) அண்ணாசாலையில் இடம்பெற்ற கார் ஓட்டப் பந்தயமொன்றில், கட்டுப்பாடை இழந்த காரொன்று அருகே இருந்த அங்காடியொன்றுக்குள் புகுந்து விபத்துக்குள்ளானதாகவும், இதில் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்விபத்தை ஏற்படுத்தியவர்கள் அருகே இருந்த மற்றொரு காரில் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இரவு நேரங்களில் நடக்கும் கார் ஓட்டப் பந்தயத்தைத் தடுப்பதற்காக பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மும்பை

வட்ஸ் அப்பில் ஸ்டேடஸ்

# யுவதி கொலை

வட்ஸ் அப்பில் ஸ்டேட்டஸ் வைத்த விவகாரத்தில் யுவதியொருவர் கொலப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மும்பையின் சிவாஜி நகரைச் சேர்ந்தவர் லீலாவதிக்கு 20 வயது நிரம்பிய மகள் உள்ளார். லீலாவதியின் மகள், 12 ஆம் திகதி தனது வட்ஸ் அப்பில் ஸ்டேட்டஸ் ஒன்றை வைத்துள்ளார். இதைப் பார்த்த அவரது தோழி, தன்மீது கொண்ட கோபத்தாலேயே இவ்வாறு செய்துள்ளதாக எண்ணி, தனது குடும்பத்தாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த குடும்பத்தினர் லிலாவதி தேவியின் வீட்டிற்குச் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாக்குவாதம் முற்றிய நிலையில், லீலாவதி குடும்பத்தினரை உருட்டு கட்டை உள்ளிட்ட ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த லீலாவதி நேற்று முன்தினம் (13) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.



# ‘திரையரங்கம் அதிரும்’

அஜித் நடிப்பில் எச். வினோத் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் வலிமை. போனி கபூர் தயாரிப்பில் வருகிற 24ஆம் திகதி பிரமாண்டமாக வெளியாகிறது.

இன்னும் 10 நாட்கள் மட்டுமே எஞ்சியிருக்கும் நேரத்தில் திரைப்படத்தை குறித்து பல விமர்சனங்கள் வெளியாகி வருகிறன. அந்த வரிசையில் தற்போது வலிமை திரைப்படம் குறித்து விமர்சன தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இயக்குநர் ஆத்விக் ரவிதரன் வலிமை திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள குறிப்பிட்ட ஒரு காட்சியை குறிப்பிட்டு, திரையரங்கம் அதிரும் என்று கூறியுள்ளார்.



இதனால், அந்த காட்சியை திரையரங்கில் பார்க்க ரசிகர்கள் தற்போதே ஆவலுடன் உள்ளனர்.



# தந்தையுடன் நடிக்கும் நடிகை

தெலுங்கு திரை உலகின் சூப்பர் ஸ்டாராக இருந்தவர் மோகன்பாபு. இவர் தமிழ் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் நெருங்கிய நண்பர்.

இந்த நிலையில் மோகன்பாபுவின் மகளான மகளும் தெலுங்கு நடிகையான லட்சுமி மஞ்சு முதல் முறையாக தனது தந்தையுடன் இணைந்து நடிக்க உள்ளதாக இன்ஸ்டாகிராமில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து லட்சுமி மஞ்சு தனது இன்ஸ்டாகிராமில், ‘என்னுடைய நீண்ட நாள் கனவான என்னுடைய முதல் ஹீரோ அப்பாவுடன் இணைந்து நடிக்கிறேன்.

இத்தனை வருடங்களில் முதல் முறையாக அவருடன் நடிப்பது ஒரு மிகப்பெரிய திரைப்பட விருதை வென்றது போன்ற உணர்வை நான் பெறுகிறேன்.

இந்த நாளுக்காக நான் மிகப்பெரிய அளவில் காத்திருந்தேன் என்பதும் எனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்பதும் இந்த வாய்ப்பை வழங்கிய அனைவருக்கும் நன்றி என்றும் தெரிவித்துள்ளார்.



# மீண்டும் வில்லனாக விஜய் சேதுபதி

தமிழ் சினிமா திரையுலகில் சிறு சிறு கதாப்பாத்திரத்தில் நடித்து பிறகு தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத கதாநாயகனாக வலம் வருபவர் விஜய் சேதுபதி.

இவர் தென்மேற்கு பருவக்காற்று, சூதுகவ்வும், நானும் ரவுடி தான், தர்மதுரை போன்ற பல திரைப்படங்களில் நடித்து தனக்கென தனி அடையாளத்தை பதித்திருந்தார்.

கதாநாயகனாக நடித்து கொண்டிருக்கும் பொழுது அவ்வப்போது ரஜினி, விஜய் என பல நடிகர்களுக்கு வில்லன் கதாப்பாத்திரத்தில் தோன்றி ஆச்சரியப்படுத்தினார்.

இவர் தற்போது முன்னணி நடிகரான கார்த்தி நடிக்கவிருக்கும் திரைப்படத்தில் வில்லனாக நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் சினிமாவில் குக்கூ, ஜோக்கர் போன்ற திரைப்படங்களை இயக்கிய இயக்குனர் ராஜு மோகன், நடிகர் கார்த்தியை வைத்து புதிய திரைப்படமொன்றை இயக்கவிருக்கிறார்.

இந்தத் திரைப்படத்தில் வில்லன் கதாபத்திரத்தில் நடிக்க விஜய் சேதுபதி ஒப்பந்தமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.



மஞ்சிமா மோகனின்

# தரமான பதிலடி

நடிகை மஞ்சிமா மோகன் தமிழில் அச்சம் என்பது மடமையடா திரைப்படத்தின் மூலமாக பிரபலம் ஆனவர். அண்மையில், வெளியான எப்ஐஆர் திரைப்படத்தில் அவர் நடித்து இருக்கிறார்.

இந்த நிலையில், அவர் தற்போது உடல் எடை கூடி குண்டாகி இருப்பது பற்றி அதிக விமர்சனங்களை சந்தித்து வருகிறார். அது பற்றி தற்போது பதிலடி கொடுக்கும் வகையில் பேசி இருக்கிறார்.

“ஒல்லியாக இருக்க வேண்டும் என அவசியம் இல்லை, ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாக இருந்தால் போதும். சாய்பல்லவியை பாருங்க. அவர் எவ்வளவு நம்பிக்கையாக தன்னை காட்டிக்கொள்கிறார். அவர் மற்றவர்களுக்கு இன்ஸ்பிரேஷன்” என்று மஞ்சிமா மோகன் கூறியுள்ளார்.



இன்று மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டி:

# தொடரை இழப்பதை தடுக்குமா இலங்கை?



இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டியானது, கன்பெராவில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 1.40 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில், முதலிரண்டு போட்டிகளில் இலங்கை தோற்ற நிலையில் தொடர் தோல்வியைத் தவிர்ப்பதற்கு இப்போட்டியில் வென்றாக வேண்டிய நிலையில் காணப்படுகின்றது.

இரண்டாவது போட்டியில் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாகத் தொடரிலிருந்து அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் விலகிய நிலையில், அவரை அணியில் மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையணியில் தனுஷ்க குணதிலகவை தனிமைப்படுத்தலில் இருந்து வெளியேறிய குசல் மெண்டிஸ் பிரதியிடவுள்ளார்.

இலங்கையணியின் பந்துவீச்சானது சிறப்பாகக் காணப்படுகின்ற நிலையில், துடுப்பாட்டமானது பதும் நிஸங்கவைத் தவிர்ந்த ஏனையோர் மேம்பட வேண்டியுள்ளது.

அவுஸ்திரேலிய அணியில் கேன் றிச்சர்ட்ஸனை ஜைஹை றிச்சர்ட்ஸன் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

ஸ்பானிய லா லிகா தொடர்:

## சமநிலையில் பார்சிலோனா அஸ்பன்யோல் போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், அஸ்பன்யோலின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், பார்சிலோனாவுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பார்சிலோனா சார்பாக, பெட்ரி, லுக் டி ஜொங் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, அஸ்பன்யோல் சார்பாகப் பெறப்பட்ட கோலை சேர்ஜி டர்டர், றாவுல் டி டொமாஸ் பெற்றிருந்தார்.



## புத்தளத்தில் புதிய கால்பந்தாட்டத் தொடர்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட லீக், புத்தளத்தில் புதிய கால்பந்தாட்ட தொடர் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

புத்தளம் நகர சபையின் முன்னாள் தவிசாளர் மர்ஹூம் கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்தமாக இந்தப் புதிய தொடர் ஆரம்பமாகவுள்ளது.

கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான இத்தொடரில் புத்தளம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவாகியுள்ள 12 அணியினர் நான்கு குழுக்களாகப் பிரிந்து போட்டியிட உள்ளனர்.

புத்தளம் லீக்கின் தலைவரும், புத்தளம் நகர சபைத் தவிசாளர் எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் லீக்கின் நிர்வாகக் குழு மற்றும் கழக செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தின் போதே இத்தொடர் தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டது.

தொடரின் முதலாவது போட்டியானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

ஏ குழுவில் நியூ ஸ்டார்ஸ், அல்-அஷ்ரக், த்ரீ ஸ்டார்ஸ் ஆகிய அணிகளும், பீ குழுவில் ஒடிடாஸ், லிவர்பூல், ட்ரிபிள் செவன் ஆகிய அணிகளும், சி குழுவில் எருக்கலம்பிட்டி, பேர்ள்ஸ், விம்பிள்டன் ஆகிய அணிகளும், டி குழுவில் யுனைடெட், நியூ ப்ரண்ட்ஸ், போல்டன் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனின் முயற்சியால்

## கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு அடிக்கல்

■ வ. சக்தி

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதான அபிவிருத்திக்கான அடிக்கல் அண்மையில் நாட்டி வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின்பால் நாட்டை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் தொகுதி ரீதியாக ஒரு விளையா ட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு ஆகிய தொகுதிகளுக்காக மூன்று பாரியளவிலான அனைத்து வசதிகளுடனான விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்கான விளையாட்டு மைதானமான மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தனின் முன்மொழிவுக்கு அமைவாக, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதானத்துக்கான அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.



மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்திநராக முன்னாள் மாகாணசபை உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூ. பிரசாந்தன் கலந்து கொண்டதுடன் 5 மில்லியன் ரூபாய் முதற்கட்ட நிதியின் ஊடாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள விளையாட்டு மைதானத்துக்கான அடிக்கல்லையும் நாட்டி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வுக்கு ஆன்மிக அதிதியாக கல்லடி வேலூர் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ வாசுதேவன் குருக்களும், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி. சரவணபவன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதித் தலைவர் எஸ். யோகவேள், கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ. சிவராசா, மண்முனை வடக்கு பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் ஏ. சுதர்சன், மாநகர சபையின் உறுப்பினர்களான சி. சுபராஜ், மதன், ஜெயா, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மண்முனை வடக்கிற்கான தலைவர் கே. காந்தராஜா ஆகியோர் உள்ளிட்ட கிராம உத்தியோகத்தர்கள், மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோக த்தர், விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

உக்ரைன்

ரஷ்யாவை எதிர்த்து

# உக்ரைனில் பேரணி

ரஷ்யாவின் போர் அச்சுறுத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைனின் தலைநகரான கைவ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணியொன்றை நடத்தியுள்ளனர்.

ரஷியாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே பல ஆண்டுகளாக எல்லைப்பிரச்சினை காணப்பட்டு வருகின்றது.

குறிப்பாக உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை கடந்த 2014 ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையான மோதல் அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஆண்டு நவம்பர் முதல் உக்ரைன் எல்லையில் ரஷ்யா தனது படைகளை குவித்து வருவதால் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது.



அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பில் உக்ரைனை சேர்ப்பதற்கும் ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்து வருவதால் போர் பதற்றம் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு எதிராக தலைநகரான கைவ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இணைந்து. “போர் எதற்கும் தீர்வாகாது” என்றும் ரஷ்யாவின் “ஆதிக்கத்தை கடுமையாக எதிர்ப்போம்” என்றும் பதாகைகளை ஏந்தியபடிபேரணியொன்றை நடத்தியுள்ளனர்.

ஜேர்மனி

பிரான்க் வோல்டர்

## மீண்டும் ஜனாதிபதியானார்



ஜேர்மனியின் ஜனாதிபதியாக பிரான்க் வோல்டர் ஸ்டீன்மெய்யர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜேர்மனியின் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் சிறப்பு கூட்டத் தொடர் நேற்று முன்தினம் (13) நடைபெற்றபோதே அதில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று பிரான்க் வோல்டர் ஸ்டீன்மெய்யர் 2 ஆவது முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் “ஜனநாயகத்திற்காக போராடுபவர்களுக்கு பக்கத்தில் நான் இருப்பேன்” எனத் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியா

## இராட்சஸ அலையில் சிக்கி 11 பேர் மரணம்

இந்தோனேசியாவில் இராட்சஸ அலையில் சிக்கி 11 பேர் உயிரிழந்த சம்பவம் அந்நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள பயங்கன் என்ற கடற்கரை உள்ளது.

இக் கடற்கரையில் நேற்று முன்தினம் (13) பாரம்பரிய சடங்கு நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளதோடு அதில் 20 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அக்கடற்கரையில் திடீரென எழுந்த இராட்சஸ அலை குறித்த நிகழ்வில் பங்குபற்றிய 23 பேரை உள்ளே இழுத்துச் சென்றதாகவும், அதில் 12 பேர் தாமாகவே நீந்திக் கரை சேர்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த பேரிடர் மீட்புக் குழுவினர் மாயமான 11 பேரை தேடும் பணியில் ஈடுபட்டதாகவும், எனினும் பல மணி நேர தேடுதல் வேட்டைக்கு பின் 11 பேரும் பிணமாக மீட்கப்பட்டதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்

## கல்லால் அடித்து ஒருவர் கொலை

பாகிஸ்தானில் மன நலம் குன்றிய ஒருவரைக் கும்பலொன்று, கல்லால் அடித்துக் கொலை செய்த சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் இஸ்லாம் மதத்தை களங்கப்படுத்துவது பெரும் குற்றமாக கருதப்படுவதால் அங்கு கடுமையான சட்டங்கள் அமலில் உள்ளன. இதற்கு மரண தண்டனையும் விதிக்கப்படுகிறது.

அதேசமயம், அந்நாட்டு பழைமைவாதிகளும் மக்களும் இச் செயலில் ஈடுபடுபவர்களைத் தாக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 12 ஆம் திகதி பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள ஜங்கல் டேரா கிராமத்தில் முஸ்டாக் அஹமது (41) குரான் நூலின் பக்கங்களை கிழித்து, தீ வைத்து எரித்ததாகவும், இதனால் அப்பகுதியைச் சேர்ந்த கும்பலொன்று அஹமதுவை இழுத்து சென்று மரத்தில் கட்டி சுற்றி நின்று கல்லால் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரித்தானியா

## 99 வயது மூதாட்டி மீது பாலியல் வன்கொடுமை

இளைஞர் ஒருவர் 99 வயதான மூதாட்டியைப் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் பிரித்தானியாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் கடற்கரை நகரமான பிளாப்பூல் அருகே உள்ள லங்காஷயர் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பாதிக்கப்பட்ட மூதாட்டியின் குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், மூதாட்டியின் அறையில் பொருத்தப்பட்டிருந்த ரகசிய கெமராவில் பதிவான வீடியோ காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அதில் அந்த வீட்டின் பராமரிப்பாளரான பிலிப் கேரி (47) என்பவர் மூதாட்டியின் அறைக்குள் நுழைந்து அவரை பாலியல் பலாத்காரம் செய்யும் காட்சிகள் பதிவாகி இருந்தன.

இதனையடுத்து கேரியை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 15 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.